செ.வெ.எண்:84 நாள்: 28.06.2021

கோயம்புத்தூர் மாவட்டம்

# மாவட்டஆட்சியர் அலுவலகத்தில் மூன்றாம் பாலினத்தவர்களுக்கு அடையாள அட்டைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

---

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று(28.06.2021) மூன்றாம் பாலினத்தவர்களுக்கு அடையாள அட்டைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.தங்கமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,**

சமூக நலத் துறையின் மூலமாக பெண்கள், குழந்தைகள் மட்டுமல்லாது மூன்றாம் பாலினத்தவர்களின் நலனுக்காகவும் தமிழ்நாடு அரசு, பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் மூன்றாம் பாலினத்தவர்கள் இன்றைய சமுதாயத்தில் மதிப்புடன் மற்றவர்களை போல பாதுகாப்பான நிலையில் தலை நிமிர்ந்து வாழ முடிகிறது.

சமூக நலத் துறை மூலமாக மூன்றாம் பாலினத்தவர்களுக்கு அனைத்து வகையான நலத்திட்ட உதவிகள் பெறும் பொருட்டு திருநங்கை/திருநம்பி என்னும் அடையாள அட்டை மருத்துவ பரிசோதனையின் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. அதனைப்போலவே, 40-வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற மூன்றாம் பாலினத்தவர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் கணக்கெடுப்பின்படி, 746 மூன்றாம் பாலினத்தவர்கள் உள்ளனர். இவர்களில் 462 பேருக்கு ஏற்கனவே

மூன்றாம் பாலினத்தவருக்கான அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து, இன்று 220 பேருக்கு மூன்றாம் பாலினத்தவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், குடும்ப அட்டை இல்லாத, மூன்றாம் பாலினத்தவர் அடையாள அட்டை வைத்துள்ள 232 பேருக்கு கொரோனா நிவாரண நிதி ரூ.2000/-மும், குடும்ப அட்டை உள்ள 340 மூன்றாம் பாலினத்தவர்களுக்கு ரேஷன் கடைகள் மூலம் ரூ.2000/- கொரோனா நிவாரணம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

அதனைதொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மூன்றாம் பாலினத்தவர்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் சிறப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் 20 மூன்றாம் பாலினத்தவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. ஏற்கனவே, 400 மூன்றாம் பாலினத்தவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

மேலும், சமூகத்தில் உள்ள அனைத்து தரப்பினரும், மூன்றாம் பாலினத்தவர்களிடம், பிறமனிதர்களை போலவே அன்பு காட்டவேண்டும். அவர்களையும் சகமனிதர்களாக மதிக்கவேண்டும்.என **மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள்** தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**